இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 12-11-2024

# பழனிசாமிக்கு எங்கே வலிக்கிறது?

திட்டங்களுக்கு தலைவர் கலைஞர் பெயரை வைக்கிறோமாம். வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. கலைஞர் பெயரை வைப்பதால் அவருக்கு எங்கே வலிக்கிறது? எதனால் எரிச்சல் ஆகிக் கொண்டிருக்கிறார்?

'அம்மா' ஜெயலலிதா ஆட்சி காலத்தைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள் பழனிசாமி!

**★ சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உணவகங்கள் திறக்கப்பட்டு அதற்கு வைக்கப்பட்ட பெயர் அம்மா உணவகம்!**

**★ பொதுமக்களுக்கு குறைந்த விலையில் தண்ணீர் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லி கொடுக்கப்பட்ட தண்ணீர் பாட்டிலுக்கு வைக்கப்பட்ட பெயர் அம்மா குடிநீர்!**

**★ உப்பு நிறுவனத்தால் தயாரித்து வழங்கப்பட்ட பாக்கெட்டுகளுக்கு வைக்கப்பட்ட பெயர் அம்மா உப்பு!**

**★ ஒரு சில இடங்களில் அமைக்கப்பட்ட மருந்தகங்களுக்கு வைக்கப்பட்ட பெயர் அம்மா மருந்தகம்!**

**★ சென்னை மாநகராட்சி சார்பில் கட்ட முயற்சித்த திரையரங்குகளுக்கு வைக்கப்பட்ட பெயர் அம்மா திரையரங்கம்!**

**★ பசுமை நுகர்வோர் காய்கறிக் கடைகளுக்கு வைக்கப்பட்ட பெயர் அம்மா காய்கறிக் கடை!**

**★ சமூக நலத் துறையின் சார்பில் திறக்கப்பட்ட 12 தங்கும் விடுதிகளுக்கு அம்மா தங்கும் விடுதிகள் என்று பெயர்!**

**★ தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை என்ற அமைப்பைத் தொடங்கி, அங்கு உற்பத்தி செய்யப்படும், தரமான சான்று பெற்ற விதைகள் 'அம்மா விதைகள்' என்ற பெயரில் 'அம்மா சேவை மையம்' என்ற அமைப்பின் சார்பில் நியாயமான விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று ஜெயலலிதா அறிவித்தார்.**

**★ சலுகை விலையில் சிமெண்ட் விற்பனை செய்யப் போகிறோம் என்று சொல்லி 'அம்மா சிமெண்ட்' விற்பனைக்கு வந்தது.**

**★ விரைவு பட்டா வழங்கும் திட்டத்துக்கு 'அம்மா திட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டது.**

**★ அம்மா முகாம்கள் அமைக்கப்பட்டன.**

**★ அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம் என்ற ஒரு திட்டம் இருந்தது.**

**★ முழு உடல் பரிசோதனைத் திட்டத்துக்கு அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம் என்று பெயர் வைத்திருந்தார்கள்.**

**★ அம்மா ஆரோக்கிய திட்டம் என்ற ஒரு திட்டம் இருந்தது.**

**★ அம்மா பூங்காக்கள் அமைக்கப்பட்டது.**

**★ அம்மா உடற்பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டது.**

இவை அனைத்தும் 'அம்மா'வே முதலமைச்சராக இருந்து 'அம்மா'வே தனது பெயரில் வைத்துக் கொண்டவை ஆகும். பழனிசாமி அறிக்கைப்படி சொல்வதாக இருந்தால், உதவாத திட்டங்களை அவர் பெயரிலேயே வைத்துக் கொண்டாரா ஜெயலலிதா?

**பழனிசாமி முதலமைச்சர் ஆனதும், கோட்டைக்கு வந்து முதல் கையெழுத்து போட்டார். மகளிருக்கு இரு சக்கர ஊர்தி வாங்க மானியம் வழங்கும் திட்டத்துக்கு 'அம்மா இருசக்கர வாகனம் திட்டம்' என்று பெயர் சூட்டியவர் பழனிசாமி. இத்தகைய பழனிசாமிக்கு கலைஞரைப் பற்றி பேச யோக்கியதை இருக்கிறதா?**

அ.தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்ட திட்டங்களை நிறுத்திவிட்டோமாம்? எந்த திட்டம் நிறுத்தப்பட்டது என்று சொல்ல வேண்டாமா? 'அம்மா உணவகத்தை மூடப் போகிறார்கள்' என்று வதந்தி கிளப்பினார் பழனிசாமி. மூன்று ஆண்டுகளாக அது சிறப்பாகத்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசின் நிதி உதவிகள் தொடர்ந்து கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. மக்கள் உணவு உண்டுதான் வருகிறார்கள். உண்மையான 'அம்மா பக்தி' பழனிசாமிக்கு இருக்குமானால் தி.மு.க. அரசை அவர் பாராட்டி இருக்க வேண்டும்.

தாலிக்குத் தங்கம் திட்டத்தை பற்றி திரும்பத் திரும்பச் சொல்வார்கள். அந்தத் திட்டத்தை உருமாற்றியதே அ.தி.மு.க. ஆட்சிதான். தி.மு.க. ஆட்சியில் மூவலூர் மூதாட்டி பெயரிலான திட்டத்தைதான் தங்கம் வழங்கும் திட்டமாக ஜெயலலிதா மாற்றினார். மூவலூர் மூதாட்டி பெயரிலான திருமண நிதி உதவித் திட்டத்தை 1989 ஆம் ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி ரூ.5 ஆயிரம் நிதி என அறிவித்தார். அ.தி.மு.க. ஆட்சியில் 2002 இல் அந்தத் திட்டத்தை நிறுத்தி விட்டார்கள். அதனை 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த முதல்வர் கலைஞர் உயிரூட்டினார். நிதியை அதிகப்படுத்தினார். மீண்டும் வந்த அ.தி.மு.க. ஆட்சியில் பணம் தருவதை, தங்கம் தருவதாக மாற்றினார்கள்.

அதையாவது முறையாகக் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. 2018-21 ஆகிய மூன்று ஆண்டு காலத்தில் இந்தத் திருமண உதவித் திட்டம் உரிய பயனாளிகளுக்கு சென்றடையவில்லை. இந்தத் திட்டத்துக்கான உதவி கேட்டு சுமார் 3 லட்சத்து, 34 ஆயிரத்து, 913 விண்ணப்பங்கள் நிலுவையில் இருந்தது. திருமணத்தன்று தாலிக்கு தங்கம் கேட்டால் திருமணம் முடிந்து குழந்தையும் பெற்று குழந்தை பள்ளிக்கு போகும் வரை தங்கம் தராத ஆட்சியாக அ.தி.மு.க. ஆட்சி இருந்தது.கழக ஆட்சி அமைந்தபிறகு ரூ.762 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.மொத்தம் 94 ஆயிரம் பேருக்கு நிதி உதவியும் தங்கமும் வழங்கப்பட்டது. அதன்பிறகுதான் இத்திட்டம் இளம்பெண்களின் கல்வி மேம்பாட்டுத் திட்டமாக மேம்படுத்தப்பட்டது.

**ஏதாவது ஒரு இடத்தில் பச்சை பெயிண்ட் அடித்து அதற்கு 'அம்மா கிளினிக்' என்று பெயர் சூட்டியவர்தான் இந்த பழனிசாமி. சென்னை சைதாப்பேட்டை பாரதி நகர் சுடுக்காட்டின் ஒரு பகுதி அம்மா கிளினிக்காக மாற்றப்பட்டது. விருகம்பாக்கத்தில் சுடுகாட்டு காரிய மண்டபத்தில் அம்மா கிளினிக் அமைக்கப்பட்டது. இப்படிப்பட்ட பழனிசாமிக்கு அறிக்கைகள் விட யோக்கியதை இல்லை.**

1100 என்ற எண்ணுக்கு போன் செய்தால் உங்கள் குறை அனைத்தும் தீரும் என்று தனது பதவிக்காலம் முடியும் போது பழனிசாமி சொன்னார். 1100 எண்ணுக்கு போன் செய்யலாம் என்பது 19.1.2016 அன்று ஜெயலலிதா தொடங்கி வைத்த திட்டம் . ஜெயலலிதாவின் திட்டத்தை அபகரித்த திருட்டுக் காரியம் செய்த பழனிசாமிக்கு கலைஞரைப் பற்றி பேச எந்த அருகதையும் இல்லை.

**நேற்றைய தினம் விருதுநகர் சென்ற முதலமைச்சர் அவர்கள் அரசு காப்பகத்துக்குச் சென்று அங்குள்ள பிள்ளைகளுக்கு கேக், பழங்கள் வழங்கினார். அந்தக் காப்பகத்தின்' பெயர் 'அன்னை சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகம் என்பதாகும். எம்.ஜி.ஆர். அவர்களின் அன்னை பெயரிலான காப்பகம் அது. அங்கே போய் பார்த்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெருந்தன்மையில் துளியாவது பெறுங்கள் பழனிசாமி!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2024) சென்னையில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்ளுப் பேத்தி ப்ரித்திகா ராணி, ஐ.எஃப்.எஸ். சித்தார்த் பழனிசாமி, IAS ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ, திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், சி.வி.எம்.பி.எழிலரசன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## விருதுநகரில் ரூ.77.12 கோடியில்

# புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து நல உதவிகளை வழங்கினார்!

**விருதுநகர், நவ. 12 -**

**விருதுநகரில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.77.12 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள விருதுநகர் மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் ரூ.21.36 கோடி செலவில் முடிவுற்ற 34 பணிகள் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, ரூ.417.21 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 57,556 பயனாளிகளுக்கு வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2024) விருதுநகரில் நடைபெற்ற அரசு விழாவில், 77 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விருது நகர் மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் 21 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு துறைகளின் சார்பில் கட்டி முடி க்கப்பட்டுள்ள 34 பணிகளை திறந்து வைத்து, 417 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 57,556 பயனாளிகளுக்கு வழங்கினார்.

விருதுநகர் மாவட்டத்தில் அரசு விழாவில் கலந்துகொள்வதற்காக நேற்று முன்தினம் (9.11.2024) விருதுநகருக்கு வருகை தந்த முதலமைச்சர் அவர்கள், விருதுநகரில் உள்ள மதன் பட்டாசு தொழிற்சாலையை பார்வையிட்டு ஆய்வு செய்து, அந் நிறுவனத்தின் உரிமையாளரிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பிற்கான முறையான காப்பீடு வசதியினை செய்திட வேண்டும் என்று அறிவுறுத்தி, தொழிலாளர்களிடம் அவர்களது கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து, விருதுநகர் அன்னை சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு தங்கி பயிலும் மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம், தங்கும் வசதிகள், அவர்களது கல்வி விவரங்கள் குறித்து கேட்டறிந்து, மாணவிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்து தரும் என்று தெரிவித்தார்.

பின்னர், விருதுநகர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் தற்போதைய நிலை குறித்து முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (10.11.2024) முதலமைச்சர் அவர்கள் விருதுநகர், பட்டம்புதூரில் நடைபெற்ற அரசு விழாவில், விருதுநகர் மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்.

**விருதுநகர் மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தல்**

வருவாய்த்துறை சார்பில், விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், கூரைகுண்டு கிராமத்தில் 7.67 ஏக்கர் பரப்பளவில், 77 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள விருதுநகர் மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகத்திற்கான கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இக்கட்டடத்தின் தரைத்தளத்தில், குறைதீர் கூட்ட அரங்கம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேர்தல் பிரிவு அலுவலகம், நான்கு சக்கர வாகன நிறுத்தம் ஆகியவையும், முதல் தளத்தில் மாவட்ட சுகாதார அலுவலகங்கள், உணவு பாதுகாப்புத் துறை, பொதுப்பணித்துறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை அலுவலகம், புள்ளியி யல் துறை அலுவலகம், தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழக அலுவலகம், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய அலுவலகங்கள் ஆகியவையும், இரண்டாம் தளத்தில் தேசிய தகவல் மையம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், மாவட்ட கருவூலம், வருவாய்த் துறை துணை ஆட்சியர் அலுவலகங்கள் ஆகியவையும், மூன்றாம் தளத்தில் துணை ஆட்சியர் (கலால், முத்திரை), சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை, தமிழ் வளர்ச்சித் துறை, சமூக நலத்துறை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் அலுவலகங்கள், நான்காம் தளத்தில் மாவட்ட ஆட்சியர் அறை, மாவட்ட வருவாய் அலுவலர் அறை, கூட்ட அரங்கம், கலந்தாய்வு கூட்ட அரங்கம், காணொலிக் கூட்ட அரங்கம், உதவி ஆட்சியர் அலுவலகம், வருவாய்த்துறை அலுவலகங்கள் ஆகியவையும், ஐந்தாம் தளத்தில் அவசர கால உதவி மையம், ஆதிதிராவிடர் நலத் துறை, உள்ளூர் நிதி தணிக்கை அலுவலகம், சுற்று லாத்துறை, கம்பி வட தொலைக்காட்சி அலுவலகம், துணை இயக்குநர் (கனிம வளத் துறை), உதவி இயக்குநர் (கைத்தறித்துறை), மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் ஆகிய அலுவலகங்களும், ஆறாம் தளத்தில் மாநில நிதி தணிக்கை அலுவலகம், துணை ஆட்சியர் அறை, பல்நோக்கு அரங்கம் ஆகியவையும் கட்டப்பட்டுள்ளது.

மேலும், இக்கட்டடம், 132 இருக்கை வசதிகளுடன் மக்கள் குறைதீர் கூட்டரங்கம், 200 இருக்கை வசதிகளுடன் கூட்ட அரங்கம்,

40 இருக்கை வசதிகளுடன் சிறு கூட்ட அரங்கம் ஆகியவையும், தரைத்தளத்தில் 17 நான்கு சக்கர வாகனங்களும், வெளிப்புறத்தில் சுமார் 227 நான்கு சக்கர வாகனங்களும் நிறுத்தும் வசதி, குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள், மழைநீர் சேகரிப்பு வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

**விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தல்**

**வருவாய்த்துறை சார்பில்**, இராஜபாளையம் வட்டத்தில் 30 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் இராஜபாளையம் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, சிவகாசி வட்டத்தில் 30 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் சல்வார்பட்டி வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, அருப்புக்கோட்டையில் 4 கோடியே 49 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் செலவில் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், என 5 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் 3 முடிவுற்ற பணிகள்;

**வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில்**, அருப்புக்கோட்டையில் 1 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் சார்பதிவாளர் அலுவலகம்;

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில்**, சாத்தூர் அரசு மருத்துவமனையில் 3 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு;

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில்**, விருதுநகர் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில், 2 கோடியே 44 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்;

**பள்ளிக்கல்வித் துறை சார்பில்**, இராஜபாளையம் வட்டம், மேலப்பாட்ட கரிசல்குளம் கிராமம், தென்றல் நகரில் 30 இலட்சம் ரூபாய் செலவில் நூலகக் கட்டடம், வெம்பக்கோட்டை வட்டம், விஜய கரிசல்குளம், செவல்பட்டி மற்றும் முத்தாண்டி யாபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் 54 இலட்சம் ரூபாய் செலவில் சுகாதார வளாகங்கள்;

**உயர்கல்வித் துறை சார்பில்**, அருப்புக்கோட்டை வட்டம், செட்டிக்குறிச்சி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 88 இலட்சம் ரூபாய் செலவில் இயற்பியல் ஆய்வுக் கூடம்;

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில்**, இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், கோபாலபுரத்தில் 42 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் கிராம ஊராட்சி செயலகக் கட்டடம், ஜமீன் கொல்ல ங்கொண்டானில் 54 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் வட்டார சுகாதார பிரிவுக் கட்டடம், நல்லமநாயக்கன்பட்டி, கணபதி சுந்தரநாச்சி யார்புரம், ரெங்கப்பநாயக்கன்பட்டி, புல்வாய் பட்டி, பெத்துரெட்டியபட்டி, விஜயரெங்க புரம் ஆகிய இடங்களில் 1 கோடியே 88 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கொங்கன்குளத்தில் 41 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் துணை சுகாதார மையக் கட்டடம், 30 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் கிழவிகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம்;

ஏழாயிரம் பண்ணை, என். சுப்பையாபுரம், கோசுகுண்டு, ஆத்திகுளம் ஆகிய இடங்களில் 31 இலட்சம் ரூபாய் செலவில் பயணியர் நிழற்குடைகள், இராமசாமியாபுரம், ஆத்திகுளம், எஸ். மறைக்குளம் ஆகிய இடங்களில் 32 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் நியாய விலைக்கடைகள், கல்குறிச்சி. அழகியநல்லூர் மற்றும் கம்பாளி ஆகிய இடங்களில் 75 இலட்சம் ரூபாய் செலவில் சமுதாய நலக்கூடங்கள், கரிசல்பட்டியில் 18 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, பெரிய ஓடைபட்டியில் 9 இலட்சம் ரூபாய் செலவில் கலையரங்கம், வெம்பக்கோட்டை வட்டம், குண்டாயிருப்பு ஊராட்சியில்

1 கோடியே 28 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் திருநங்கைகளுக்கான வீடுகள், என 6 கோடியே 51 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவில் 23 முடிவுற்ற பணிகள்;

**என மொத்தம் 21 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு துறைகளின் சார்பில் கட்டி முடிக்க ப்பட்டுள்ள 34 பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்வ**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 40,148 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில் சுய உதவி குழுக்களில் 9758 பயனாளிகள் பயன்பெறும் வகையில் கடனுதவி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் 4 பயனாளிகளுக்கும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் 223 பயனாளிகளுக்கும் உதவிகள், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 12 பயனாளிகளுக்கு கடனுதவிகள், வேளாண் பொறியியல் துறை சார்பில் 85 பயனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களில் உதவிகள், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் 200 பயனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களில் நலத்திட்ட உதவிகள், தோட்டக்கலை துறை சார்பில் 150 பயனாளிகளுக்கு உதவிகள், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை சார்பில் நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு உதவிகள், முன்னோடி வங்கியின் சார்பில் 6,971 பயனாளிகளுக்கு கடனுதவி, **என மொத்தம் 417 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 57,556 பயனாளிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

முன்னதாக, விழா நடைபெறும் அரங்கில் வெம்பக்கோட்டை அகழ்வராய்ச்சி, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, நான் முதல்வன் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்தும், வேளாண்மை - உழவர் நலத்துறை, வருவாய்த் துறை, சமூக நலத்துறை போன்ற பல்வேறு துறைகளின் சார்பிலும் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்கினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள்

மாணிக்கம் தாகூர், நவாஸ் கனி, திருமதி ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், எஸ். தங்கபாண்டியன், ஏ.ஆர்.ஆர். ரகுராமன், வருவாய் நிர்வாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேருவின் திருச்சிராப்பள்ளி முகாம் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (10.11.2024) ஜனவரி 2025ல் திருச்சி மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் தமிழ்நாடு பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் வைரவிழா மற்றும் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி தொடர்பான முதல் ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகர காவல் ஆணையர் திருமதி.காமினி, மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வருண்குமார், பெருந்திரளணி பொறுப்பாளர் அறிவொளி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.கிருஷ்ணப்பிரியா, பள்ளிக்கல்வித்துறை அலுவலர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.